# என் வாழ்வில் ஒளியேற்றிய ஒருங்கிணைந்த பண்ணையம்



எனது பெயர் **ச.கணேஷ் கமலக் கண்ணன்.** குடவாசல் தாலுக்கா, கொத்தங்குடி கிராமத்தைச் சேர்ந்த 35 வயது நிரம்பிய வணிகவியல் பட்டதாரியான நான் 5 ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரிலே் பணி செய்தேன். அப்பொழுது எனது தந்தை உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் மீண்டும் இந்தியா வந்து சேர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நாடு திரும்பிய பின் எங்கள் 10 ஏக்கர் நிலத்தில் நெல் மற்றும் கரும்பு பயிர்களை மட்டுமே சாகுபடி செய்து வந்தேன். நோய் மற்றும் பூச்சித் தாக்குதல் பிரச்சனைகளும் புயல், வெள்ளம் போன்ற பாதிப்புகளும் கூலி ஆட்கள் பற்றாக்குறை இருந்ததால் குறைந்த வருமானமே கிடைத்தது. விவசாயம் என்பது எனக்கு தெரிந்திருந்தாலும் அதில் உள்ள தொழில்நுட்பங்கள் பற்றி எனக்கு புரியாததால் நஷ்டம்தான் ஏற்பட்டது. இதனிடையே நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொடர்பு ஏற்பட்டு விஞ்ஞானிகளின் ஆலோசனையின் பேரில் பயிர் சாகுபடி மற்றும் மீன் வளர்ப்புடன் இணைந்த ஒங்கிணைந்த பண்ணையத்தின் உப தொழில்களான ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றை ஆரம்பிக்கும் முயற்ச்சிகள் மேற்கொண்டேன். முதல் கட்டாக 10 ஆடுகள் வாங்கி பரண்மேல் ஆடு வளர்ப்பை ஆரம்பித்தேன். அப்போது தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு 25 குட்டிகள் இறக்க நேரிட்டது. இக்கட்டான இந்த சூழ்நிலையில் நீடாமங்கலம் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முதல்நிலை செயல்விளக்கத் திடல் அமைக்க கோ4 கம்பு நேப்பியர் தீவன ஒட்டுப் புல்லின் கரணைகளை இலவசமாக தந்து தொழில்நுட்ப விளக்கமளித்தனர். குளத்தின் கரைகளில் கோ4 தீவனப்புல் கரணைகளை நட்டதுடன் மட்டுமில்லாமல் தனியாக கோ4 தீவனப் புல்லை ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்தேன். எனது வயலில் வயல் தின விழா கொண்டாடப்பட்டு சுற்று வட்டார விவசாயிகளுக்கு இலவசமாக புல் கரணைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி எங்கள் பகுதி விவசாயிகளிடையே எனக்கு நல்ல பெயரையும் மதிப்பையும் ஏற்படுத்தியது. மேலும் அறிவியல் நிலைய தலைவர் அவர்கள் திருச்சி அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சியில் என்னைப் பற்றி ஒலிபரப்பச் செய்தது எனக்கு மேலும் உற்சாகத்தை தந்தது. மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறேன். துல்லிய பண்ணைய காய்கறி சாகுபடியால் தினந்தோறும் வருமானம் பார்க்க முடிகிறது. வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் 10 நந்தனம் 1 என்ற கோழி குஞ்சுகள் எனக்கு இலவசமாக தந்தார்கள். அதனை மூலதனமாக வைத்து என்னிடம் தற்போது உள்ள 50 கோழிகள் மூலம் வருடத்திற்கு ரூ. 30,000 வரை லாபம் கிடைக்கின்றது. நேரடி நெல் விதைப்புக் கருவி, மற்றும் திருந்திய நெல் சாகுபடி முறைகளை கடைபிடித்து பயிர் சாகுபடியிலும் வெற்றி கண்டு வருகிறேன். வீட்டில 2 கறவை மாடுகள் வளர்க்கிறேன். சாணத்தை சாண எரிவாய் உற்பத்தி க்கும் மீன் குட்டைகளுக்கும் பயன்படுத்துகிறேன். ஆட்டுப் புழுக்கைகளை காய்கறி தோட்டம் மற்றும் வயலுக்கு உரமாக இடுகிறேன். ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் எனக்கு வருடத்திற்கு குறைந்த பட்சம் 10 லட்சம் கிடைக்கிறது. ஒருங்கிணைந்த பண்ணையம் வெற்றிகரமாக செயல்படுத்தியமைக்கு எனக்கு 2011 ஆம் ஆண்டு வேளாண்மை சாதனையாளர் விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்கள் வழங்கியதை பெருமையாகக் கருதுகிறேன்.

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் எனது ஒவ்வொரு வெற்றிக்கும் மிகவும் உறுதுணையாக இருந்தது என்பது என்றும் என்னால் மறுக்க முடியாதது.

# என்னை உயர்த்திய உள்நாட்டு கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பு



எனது பெயர் **கார்த்திக் குமார்,** திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டாரத்தில் உள்ள புள்ளவரராயன்குடிக்காடு கிராமத்தைச் சார்ந்த எனக்கு 33 வயதாகிறது. இளமைப் பருவத்தில் தந்தையுடன் வயலுக்கு செல்வதை வாடிக்கையாக கொண்டிருந்தேன். எல்லாமே நன்செய் நிலம். இதனால் நெல் சார்ந்த பயிர்சாகுபடியைத் தவிர எதைப் பற்றியும் எனது தந்தை சிந்திக்காததால் பொருளாதார நெருக்கடியும் குடும்பத்தில் நிம்மதியின்மையும் ஏற்பட்டதுதான் மிச்சம். வேளாண்மையில் முழுமையாக ஈடுபட முடிவெடுத்து, நெல்சார்ந்த பண்ணையத்தில் மீன் வளர்ப்பு பயிற்சி பெற்று நெல் சாகுபடியை தவிர்த்து மீன் வளர்ப்பு மேற்கொள்வது என தீர்மானித்தேன். 2 ½ ஏக்கரில் குளம் வெட்டி மீன் வளர்ப்பு மேற்கொள்ள தொடங்கியதிலிருந்து எனது வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டப்பட்டது. மீன் வளர்ப்பில் நிறைய லாபம், அறுவடை செய்த இடத்திலேயே விற்பனை செய்யக்கூடிய வாய்ப்பு, குறைவான ஆட்கள் கொண்டு பண்ணை நிர்வாகம், சமூகத்தில் ஒரு மரியாதை என எல்லாமே சிறப்பாக இருந்ததால் 2003 ல் மேலும் 2 1/2 ஏக்கரில் மீன் வளர்க்க ஆரம்பித்தேன். இருந்த அனைத்து நன்செய் நிலங்களும் குளங்களாக மாறியதால் சில்லரை செலவினங்களுக்கு வருமானம் தரக்கூடியது பற்றி யோசனை எழுந்தது. விடைதேடி நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளின் தொடர்பு கொண்டதின் மூலம் குளங்களின் கரைகளில் தென்னை மரங்கள், வாழை மரங்கள் , தேக்கு மரங்கள். தீவனப் புல் வகைகள் வளர்க்க ஆரம்பித்தேன். மீன் வளர்ப்பின் நன்மைகள் என்னை மேலும் ஊக்கப்படுத்தியதின் விளைவாக எனது பண்ணைக்கு அருகாமையில் 4 ஏக்கர் குளங்களை குத்தகைக்கு எடுத்து மீன் வளர்ப்பு மற்றும் நுண் மீன் குஞ்சு வளர்ப்பு மேற்கொண்டுள்ளேன். ஒவ்வொரு முறையும் 15 லட்சம் முதல் 20 லட்சம் நுண் குஞ்சுகள் வாங்கி வளர்க்கும்போது 1 முதல் 1.5 லட்சம் மீன் குஞ்சுகள் (2/3 இஞ்ச் அளவு) கிடைக்கும். எனக்கு தேவையான சுமார் 50000 குஞ்சுகள் போக மீதமுள்ளவற்றை பிறருக்கு விற்பனை செய்து வருகிறேன்.சாதாரண மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் போது ஆண்டு வருமானம் 50,000 கிடைத்தது. வருமானத்தை இன்னும் கூடுதலாக்க வேண்டும் என்று எண்ணினேன். நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளின் ஆலோசனை மற்றும் செயல் விளக்க திடல்கள் மூலம் விஞ்ஞான ரீதியில் வளர்த்தால் அதிக லாபம் பெறலாம் என்பதை உணர்ந்தேன். கூட்டுக் கெண்டை மீன்களை வளர்ப்பது, விஞ்ஞான ரீதியில் உணவளிப்பது, நீர் பராமரிப்பு போன்ற உத்திகளைக் கடைபிடிக்க ஆரம்பித்தேன். வருமானத்தை இன்னும் கூடுதலாக்க வேண்டும் அதற்கு என்ன செய்ய வேண்டும் என விஞ்ஞானிகளை தொடர்பு கொண்டபோது வளர்ச்சி அடக்கப்பட்ட மீன் குஞ்சுகளை பயன்படுத்தினால் ஆண்டிற்கு இரண்டு அறுவடை மேற்கொள்ள முடியும், ஒரு ஏக்கரில் இருந்து நிகரலாபகரமாக 1.25 லட்சம் வரை பெற முடியும் என தெரிய வர வளர்ச்சி அடக்கப்பட்ட கூட்டு கெண்டைமீன் இனங்களை வளர்ப்பு செய்து வருகிறேன். வேளாண்மை அறிவியல் நிலையம் எனக்கு நவம்பர் '11 அன்று நடைபெற்ற ஐந்தாவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணை வேந்தர் **முனைவர். முருகேச பூபதி** அவர்களின் பொற்கரங்களால் '**வேளாண்மைச் சாதனையாளர் விருது**' வழங்கி கௌரவப்படுத்தியது. எனது வருமானம் பெருகி வாழ்க்கைத்தரம் உயர்ந்து சமூகத்தில் ஒரு அந்தஸ்த்தை ஏற்படுத்தி தந்தது மீன் வளர்ப்பு என்றால் அது மிகையில்லை.

## திருந்திய நெல் சாகுபடியில் என் சாதனை



எனது பெயர் **ஆர். அருண்குமார்**. எனக்கு வயது 27. எனது பூர்வீகம் மன்னார்குடி வட்டாரம் காரிக்கோட்டை கிராமம். நான் ஒரு M.B.A பட்டதாரி. விவசாயத்தில் நிச்சயமற்றத்தன்மை நிலவியதால் எதிர்காலம் இல்லை என கருதிய எனது தந்தை என்னை விவசாயத்தில் ஈடுபடுத்த விரும்பவில்லை. இதனால் விவசாயத்தில் ஆர்வம் இல்லாமல் போய்விட்டது. M.B.A பட்டம் பெற்று பங்கு சந்தை நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்து சுமார் 2 1/2 ஆண்டுகள் பணியாற்றினேன். ஆனால் என்னால் தொடர்ந்து பணியில் கவனம் செலுத்த முடியவில்லை. இதிலிருந்து விடுபட்டு கிராமத்திற்கு திரும்பி மன நிம்மதிக்காக எனது வயல்களை சுற்றி வர ஆரம்பித்தேன். விவசாய தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ளும் ஆவலோடு 2009-ஆம் ஆண்டு நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டேன். பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திருந்திய நெல் சாகுபடி பற்றிய நுட்பங்களை தெரிந்து கொண்டேன். கூலி ஆட்கள் பற்றாக்குறை, விவசாய இடுபொருள் விலை உயர்வு, பாசனநீர் பற்றாக்குறை போன்ற பெரிய பிரச்சனைகளுக்கு விடை சொல்லும் வகையில் திருந்திய நெல் சாகுபடி என்னை தீவிரமாக விவசாயத்தின் பக்கம் ஈர்த்தது. மேலும் புதிய புதிய தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொண்டு இன்று முழுமையாக விவசாயத்தை மட்டும் தொழிலாக செய்து வருகிறேன். திருந்திய நெல் சாகுபடி குறைந்த இடுபொருள் செலவில் நிறைந்த லாபம் பெற முடியும் என்று என்னுள் நம்பிக்கையை கூட்டியது. முதல் வருடம் சுமார் 50 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்ய நினைத்து அதனை செயல்முறைப்படுத்திய போது தான் நிறைய விஷயங்களை நான் அனுபவபூர்வமாக உணர்ந்தேன். அனைவரும் 35 முதல் 40 கிலோ விதை விட்டு நாற்று நட நான் ஒரு ஏக்கருக்கு 3 கிலோ விதையினை பயன்படுத்தி பாய் நாற்றாங்கால் அமைத்ததை பார்த்து அனைவரும் வியப்புற்றனர். சிலர் கேலியும் செய்தனர். மேலும் 14 வது நாளில் அந்த வாளிப்பான நாற்றுக்களை பிரித்து எடுத்து குத்துக்கு ஒரு நாற்று வீதம் அதிக இடைவெளியில் சதுர நடவு நட்டு கோனோவீடர் களைக்கருவி கொண்டு 3 முறை பயன்படுத்துவதன் மூலம் களைக் கட்டுப்பாடு செய்ததன் மூலமாக முதுல் வருடம் நல்ல விளைச்சல் மற்றும் குறைந்த செலவுகளைக் கண்டு என் தந்தையார் மிகவும் நம்பிக்கை வைத்தார். தொடர்ந்து இன்று வரை திருந்திய நெல் சாகுபடியை பின்பற்றி தற்போது ஏக்கருக்கு 42 மூட்டை (2520 கிலோ) குறையாமல் எடுத்து வருகிறேன். பொருளாதார ரீதியில் குறைந்த விதையளவு , நீர், கூலி ஆள் மூலம் இடுபொருள் செலவில் ஏக்கருக்கு ரூ. 1000 வரை மிச்சப் படுவதோடு, கூடுதல் மகசூல் மூலம் ஏக்கருக்கு கூடுதலாக ரூ. 4000 முதல் 4500 வரை நிகர வருமானமும் கிடைக்கப் பெற்றேன். மேலும் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தில் என்னிடம் கலந்துரையாடல் நடத்தி ஒலி பரப்ப செய்தது என்னை மேலும் மேலும் ஊக்கப்படுத்தியது. **2010**ம் ஆண்டு தினமலர் சார்பாக நடைபெற்ற விவசாய கண்காட்சியல் **வெற்றிகர திருந்திய நெல் சாகுபடியாளருக்கான விருதினை** வழங்கி கௌரவப்படுத்தியது என்னை ஊக்கப்படுத்தி மேலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டியது. 2011 –ம் ஆண்டு நவம்பர் மாதம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் திருந்திய நெல் சாகுபடியினை தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருவதை பாராட்டி **"வேளாண்மை சாதனையாளர் விருதினை"** வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் அவர்களின் பொற்கரங்களால் வழங்கி கௌரவித்தனர். திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 80 மூட்டை (4800 கிலோ) மகசூல் எடுப்பதே என் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு தீவிரமாக ஈடுபட்டு வருகிறேன்.

# பொருளாதார இடர் களைந்த புறக்கடை கோழி வளர்ப்பு



எனது பெயர் **நா. கிருஷ்ணகுமார்,** தந்தை பெயர் ம.நாராயணசாமி, எனது வயது 35 ஆகிறது. நான் 3/483 மேலத் தெரு, தேவங்குடியில் வசித்து வருகிறேன். நான் ஒரு இளங்கலை பட்டதாரி. படிப்பு முடிந்த பின்னர் வேலை இல்லாததால் ஒரு தனியார் நகைக்கடையில் வேலைப் பார்த்து வருகிறேன். நான் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவன், எனக்கு போதிய வருமானம் இல்லாததால் கஷ்டப்பட்டு வந்தேன். என்னிடம் விவசாயம் செய்வதற்கு விவசாய நிலமும் இல்லை. இதற்கிடையில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைப்பெற்ற புறக்கடை கோழி வளர்ப்பு பயிற்சியில் கலந்துகொண்டு கோழி வளாப்பின் முக்கியத்துவத்தையும், வியாபார ரீதியாக வளர்க்கப்படும் உயர்ரக நாட்டுக் கோழிகள், அதிக முட்டையிடும் கலப்பினக் கோழிகள், கறிக்கோழிகள், முட்டைப் பொறிப்பகம் அதன் பயன்பாடும் பற்றி பயிற்சியின் மூலம் அறிந்துகொண்டேன். இப்பயிற்சியின் பின்னர் புறக்கடை கோழி வளர்ப்பை அறிவியல் பூர்வமாகவும், வியாபார தொழிலாக வளர்க்க வேளாண்மை அறிவியல் நிலையத்தினை அனுகினேன். அவர்கள் எங்கள் ஊரில் புறக்கடை கோழி வளர்ப்பில் நாமக்கல் I கோழியை அறிமுகப்படுத்தி முதல்நிலை செயல்விளக்கத் திடல்கள் அமைத்தனர். நான் அவர்களின் அறிவுரைப்படி வளர்ப்பிடம் அமைத்து 50 நாமக்கல் I என்ற கலப்பினக் கோழியை குஞ்சுகளாக வளர்த்து தற்போது 200 கோழிகளாக பெருகியுள்ளது. மேலும் புறக்கடை கோழி வளர்ப்பில் கிடைக்கும் முட்டைகளை சொந்தமாக வடிவமைத்து தயாரித்த முட்டை பொரிப்பகத்தில் வைத்து குஞ்சுகளை பொரித்தெடுத்து விற்பனை செய்து வருகிறேன். இதன் மூலம் 90 சதவீதம் பொரித்த குஞ்சுகள் நல்ல திடகாத்திரமானதாக கிடைக்கிறது. அதனை குஞ்சு வளர்ப்பு பெட்டியில் வைத்து 15 தினங்கள் வரை வளர்த்து பிறகு ஆழ் கூள் முறையிலான கூண்டுகளில் வளர்த்து வருகின்றேன். இவ்வாறு வளர்க்கப்படும் குஞ்சுகளையும், வளர்ந்த கோழிகளையும், நாட்டுக் கோழி முட்டைகளையும் உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் விற்பனை செய்து நல்ல லாபம் ஈட்டி வருகிறேன். புறக்கடை கோழி வளர்ப்பின் மூலமாகவும், குஞ்சி பொரிப்பகத்தின் மூலமாகவும் மாதம் ரூ. 4000 வரை வருமானமாக எனது குடும்பத்திற்கு கிடைக்கிறது. எனது குடும்பத்திலுள்ள எனது தாயாரும் எனது மனைவியும் இத் தொழிலில் எனக்கு உதவி செய்து வருகின்றனர். புறக்கடை கோழி வளர்ப்பின் மூலமாக எனது பொருளாதாரமும், அந்தஸ்தும், சமுதாயத்தில் உயர்ந்துள்ளது. இத்தொழிலை செய்வதின் மூலம் மிகுந்த உற்சாகமும், தன்நம்பிக்கையும், மனநிம்மதியையும் அடைந்துள்ளேன். நான் அடைந்த இப்பயனை எனது கிராமத்தில் உள்ள படித்த வேலையில்லா இளைஞர்களுக்கும், விவசாயிகளுக்கும் புறக்கடை கோழி வளர்ப்பின் முக்கியத்துவத்தையும் அதனால் கிடைக்கும் பலனையும் எடுத்துக் கூறி வருகிறேன்.

## விதை உற்பத்தி செய்தால் வெற்றி நிச்சயம்



எனது பெயர் **நளன்**, மன்னார்குடி வட்டம், மேலதிருப்பாலக்குடி கிராமத்தை சேர்ந்த எனக்கு 36 வயதாகிறது. விவசாயக் குடும்பத்தில் பிறந்ததினால் சிறு வயது முதலே விவசாயப் பணிகளில் ஈடுபடுவதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. சாகுபடி செய்யும் நோக்கில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் விஞ்ஞானிகளை சந்தித்து வேளாண்மை தொழில்நுட்பங்கள் நிறைய தெரிந்து கொண்டேன். இதனால் திருந்திய நெல்சாகுபடி, பூச்சி நோய் மேலாண்மை, பண்ணை இயந்திரமயமாக்கல், விதை உற்பத்தி, வேளாண்மை சார்ந்த உபதொழில்கள் என எனது வேளாண் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் நமது முன்னோர்கள் தங்களுக்கு தேவையான விதைகளை தாங்களே உற்பத்தி செய்து அதனை பாதுகாத்து வைத்தனர். தற்போது விவசாயிகள் விதைப்பதற்கு முன்புதான் அதனைப் பற்றி சிந்திக்கிறார்கள். இதனை பயன்படுத்தி தனியார் விதை விற்பனையாளர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். இதனை போக்க விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை தாங்களே உற்பத்தி செய்ய வேண்டும். நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சியில் கலந்துகொண்டு தொழில்நுட்பங்களைஅறிந்தேன். விதை உற்பத்தி செய்தேன். விதை உற்பத்தியில் வருமானம் கூடுதல் என்றாலும் விதைக்காக அறுவடை செய்யும்போது கூலி ஆட்கள் கொண்டே அறுவடை பிடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை. களவன்கள் நீக்குதல் போன்றவற்றிற்கு திறமையான தொழிலாளர்கள் அவசியம். விதை உற்பத்தியில் பல கஷ்டங்கள் இருந்தாலும் என்னால் 10 விவசாயிகளாவது பயனடைய வேண்டும் என மனநிறைவோடு செய்து வருகிறேன். என்னைப் போன்ற இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வெற்றியடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இந்த ஆண்டு எனது நண்பர்கள் மற்றும் விவசாயிகள் 10 பேர் கொண்ட **"முல்லை விதை உற்பத்தியாளர் குழு"** ஒன்றை ஆரம்பித்து விதை உற்பத்தி செய்து வருகின்றோம்.இக்குழுவில் ஒத்த கருத்துள்ள மேலும் பலரை இணைத்து பெரிய அளவில் விதை உற்பத்தி செய்த எங்கள் கிராமம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளுக்கு தேவையான தரமான விதைகளை உற்பததி செய்து வழங்கிட மிகவும் ஆர்வமாக உள்ளேன். வயல் அளவில் எங்களைப் போன்ற இளைஞர்களின் கவனம் இருக்கும்போது எங்கள் இல்லத்தரசிகள் அவர்களும் வேளாண் சார்ந்த தொழில்களில் கவனம் செலுத்தி வருமான பெறலாம் என நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் அறிவுறுத்திய புறக்கடை கோழி வளர்ப்பை எங்கள் கிராமத்தில் முதன் முதலாக செயல்படுத்தி வெற்றிக் கண்டுள்ளோம். மற்றவர்களுக்கும், பயனளிக்கும் வகையில் கிராம அளவில் கோழி குஞ்சுகள் பொரிப்பகம் வைத்து சக விவசாய நண்பர்களுக்கு குஞ்சுகள் விநியோகித்து வருகிறேன். விதை உற்பத்தி செய்தால் நாம் ஜெயிக்கலாம்,'என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் அயல்நாட்டில்' என்ற திரைப்பட பாடலின் அர்த்தம் பட்டறிந்து, தெரிந்து கொண்டதோடு மட்டுமல்லாது விதை உற்பத்தியில் வெற்றியும் கண்டு வருகிறேன்.

# நெல் சாகுபடியை இலகுவாக்கிய இயந்திரமயமாக்கல்



எனது பெயர் **T.N.D. ராஜ்குமார்**, முதுநிலை பட்டதாரியான என் வயது-31 எங்கள் 50 ஏக்கர் நிலத்தில் எனது தந்தை தான் நெல் சாகுபடி செய்து வந்தார். நான் எனது தந்தையுடன் எப்போதாவது வயலுக்கு செல்வதுண்டு. எனது படிப்பை முடித்தவுடன் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். ஆனால் 50 ஏக்கர் நிலத்தில் நெல் விவசாயம் செய்தும் அதிக முதலீடு மற்றும் ஆட்கள் பற்றாக்குறை, தண்ணீர் தட்டுப்பாடு, கூலி உயர்வு போன்றவையால் பொருளாதாரத்தில் ஒரு முன்னேற்றமும் இல்லாமல் சாதாரண வாழ்க்கை முறையில் குடும்பம் நடந்தது. இந்த சூழ்நிலையில், என் தந்தை வயதின் காரணமாக சரிவர விவசாயம் செய்ய முடியாததை உணர்ந்தேன். நாம் ஏன் நல்லதொரு விவசாயம் செய்யக் கூடாது என்று யோசித்து நான் பார்த்து வந்த வேலையை விட்டுவிட்டு முழு நேர விவசாயத்தில் ஈடுபட்டேன் இந்த நேரத்தில் தான் நான் நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தின் அறிவுரைகளை கேட்க ஆரம்பித்தேன். நெல் விவசாயத்தை எப்படி இயந்திரம் மூலம் செயல்படுத்துவது என்று தினமும் வேளாண் அறிவியல் நிலையத்தின் கதவை தட்ட ஆரம்பித்தேன். அதன் பலன்தான் நான் முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட நெல் சாகுபடி செய்ய முடிந்தது. முதலில் சிறு முதலீட்டில் வேளாண் அறிவியல் நிலைய அறிவுரைப்படி நேரடி நெல் விதைப்பு கருவி வாங்கி பயன்படுத்தினேன். இந்த கருவியின் மூலம் லாபம் கண்ட நான், வரப்பு கழிக்க அதிக உடல் உழைப்பும் மற்றும் கூலியும் தேவைப்பட முதுநிலை பட்டதாரியான நான் ஒரு Mud trimmer ஐ வடிமைத்தேன். அதனைக் கொண்டு வரப்பு கழித்தேன். இதனை பவர் டில்லர் உதவியுடன் ஒரு லிட்டர் டீசலில் வரப்பு கழித்துவிட முடிந்தது. பள்ளமான நிலத்தில் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்து லாபத்தை உணர்ந்தேன். குறித்த நேரத்தில் நினைத்த அளவில் நடவு செய்து நல்ல மகசூல் கிடைத்தது. களை எடுக்க TNAU Power Weeder கொண்டு இடை உழவு செய்ய ஆரம்பித்தேன். சராசரியாக ஒரு ஏக்கருக்கு 2,200 கிலோ விளைச்சல் கொடுத்தது. தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க வேளாண்மை அறிவியல் நிலையத்தின் ஆலோசனைப்படி நன்கு கோடை உழவு ஒட்டி Seed drill மூலம் நெல் விதைத்ததும் அதில் TNAU Power Weeder கொண்டு இடை உழவு மற்றும் களையை கட்டுப்படுத்தி அதிக செலவு இன்றி செய்கிறேன். மருந்து மற்றும் உரம் தெளிப்புக்கும் குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் தெளிக்கக் கூடிய பவர் டில்லர் உதவியுடன் இயங்கக்கூடிய 'பூம்' ஸ்பிரேயர் கருவியை வாங்கினேன் நெல் அறுவடை இயந்திரம் வாங்கி வேலையை மிகச் சுலபமாக செய்து முடிக்கிறேன். நெல் சாகுபடியை முழுவதுமாக இயந்திரம் மூலம் செய்யும் போது எனக்கு முதலீடு ஒரு பங்காகவும், இலாபம் மூன்று பங்காகவும் உள்ளது. என் பண்ணை இயந்திரங்களை மற்ற விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுத்து உதவி வருகிறேன். இந்த இயந்திரமாக்களின் வெற்றிக்கு நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் அறிவுரையும், ஆலோசனையும் மிக மிக முக்கியம் என்றால் அது மிகையாகாது.

## துல்லிய பண்ணையத்தில் காய்கறி சாகுபடி – என் வெற்றி அனுபவம்



என் பெயர் **நொ.சரவணன்.** மன்னார்குடி வட்டம், மேலநாகை கிராமத்தில் வசித்து வருகிறேன். என் வயது 36. எனது பெற்றோர் பால் பண்ணை வைத்து பால் வியாபாரம் செய்து வந்தனர். அதன் மூலம் சிறிது சிறிதாக 15 ஏக்கர் நிலம் வாங்கி விவசாயம் செய்தனர். நான் 9 ஆம் வகுப்போடு படிப்பை முடித்து விட்டு எனக்கென்று கொடுத்த 3 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய ஆரம்பித்தேன். எனக்கு ஒதுக்கப்பட்ட நிலமானது மேட்டுப்பகுதியில் அமைந்தது. அதனால் எனது பெற்றோர் நீர் பற்றாக்குறை மற்றும் மேட்டுப்பகுதி என்பதால் அதில் யூகாலிபடஸ் மரத்தை வளர்த்து வந்தனர். நான் விவசாயம் செய்ய ஆரம்பித்தவுடன் 3 ஏக்கரில் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்து காய்கறி சாகுபடி செய்தேன். ஆனால் மணல் கலந்த மண் தன்மை மற்றும் மேட்டுப் பகுதி என்பதால் என்னால் 1/2 ஏக்கர் அளவு மட்டுமே காய்கறி சாகுபடி செய்ய முடிந்தது. அதனால் என்ன செய்ய போகிறோம் என்ற கவலையில் இருந்தபோது எனது வாழ்வில் ஒளி ஏற்றும் விதத்தில் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் எனது கிராமத்தில் விழிப்புணர்வு முகாம் நடத்தினர். நான் நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி மற்றும் கண்டுணர்வு சுற்றுலாவிலும் கலந்து கொண்டு துல்லிய பண்ணையத்தில் காய்கறி சாகுபடி செய்ய ஆரம்பித்தேன். முதலில் 1/2 ஏக்கர் நிலம் மட்டுமே சாகுபடி செய்ய முடிந்த என்னால் சொட்டு நீர் பாசன உதவியால் எனது அனைத்து 3 ஏக்கர் நிலம் மற்றும் எனது சகோதரர் நிலத்திலும் சாகுபடி செய்ய முடிந்தது. முன்பு 1/2 ஏக்கர் சாகுபடி செய்தபொழுது எனக்கு ஆண்டு வருமானம் ரூ. 25,000 மட்டுமே. துல்லிய பண்ணையம் மூலம் சாகுபடி செய்யத் தொடங்கிய பின் வருமானம் ரூ. 2,25,000 ஆக உயர்ந்துள்ளது. 3 ஏக்கரில் அனைத்து காய்கறிப் பயிர்களையும் பயிர் சுழற்சி முறையில் பயிரிட ஆரம்பித்தேன். இவ்வாறு வருடம் முழுவதும் சுழற்சி முறையில் காய்கறி சாகுபடி செய்ததினால் என் ஆண்டு வருமானம் ரூ. 3,00,000 ஆக உயர்ந்துள்ளது. பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் அதிக பகல் நேர வெப்பநிலையால் கோடை காலத்தில் காய்கறியில் என்னால் நல்ல மகசூல் எடுக்க முடியவில்லை. வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளை தொடர்பு கொண்ட போது சின்ன வெங்காயம் சாகுபடி பற்றி அறிந்தேன். நிலையத்தின் மூலமாக Co5 என்ற சின்ன வெங்காய ரகத்தை பரவலாக்கம் செய்வதற்காக முதல் நிலை செயல் விளக்கம் எனது தோட்டத்தில் 1/2 ஏக்கரில் கடந்த மாதம் 2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. கோடை காலத்தில் வெண்டை சாகுபடி செய்ததால் எனக்கு ஏக்கருக்கு ரூ. 12,000 மட்டுமே கிடைக்கும் . ஆனால் வெங்காயம் சாகுபடி செய்த பொழுது ஏக்கருக்கு லாபமாக ரூ.27,000 கிடைக்கப்பெற்றேன். இதனை செயல் விளக்கம் மற்றும் வயல்தின விழாவில் கண்ட எனது கிராமத்தை சார்ந்த விவசாயிகள் வரும் ஆண்டுக்கு சின்ன வெங்காயம் சாகுபடி செய்வதற்கு அதிக ஆர்வமுடன் உள்ளனர். துல்லிய பண்ணையத்தில் காய்கறி சாகுபடி செய்து இன்று என் பொருளாதாரம் பல மடங்கு கூடியுள்ளதற்கு நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் முக்கி பங்கு வகிக்கிறது என்பதை மனதார பாராட்டுகிறேன்

## நெல் சாகுபடியை லாபகரமாக்கிய நேரடி நெல் விதைப்பு



என் பெயர் **சிவக்குமார்**. 35 வயதான நான், வலங்கைமான் வட்டம், வாடாமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை விவசாயம் செய்ய வயலுக்கு செல்லும் போது நானும் அவருடன் வயலுக்கு சென்ற வயலை பார்த்து வருவேன். எனது தந்தை 1992 ஆம் ஆண்டு இறக்க நேரிட்டது . தந்தையின் மறைவிற்கு பின் விவசாயத்தை முழுமையாக நானும் எனது தாயாரும் கவனிக்க வேண்டியாயிற்று. அப்போது தொடர்ந்து ஐந்து வருடம் நெல் சாகுபடியும், கோடையில் பாசிப்பயறு சாகுபடியும் செய்து வந்தோம். தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டதால் நிலத்தினை 10 ஆண்டுகள் குத்தகைக்கு விட்டோம். ஆனால் குத்தகைக்காரர் சரியாக குத்தகை தராமல் ஏமாற்றி வந்தார். சரி ஏன் சாகுபடியை நாமே முயற்சி செய்யக் கூடாது என்று யோசித்து சாகுபடி முறைகளை சரியான முறையில் செய்ய வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினேன். விவசாயம் செய்யும் போது நான் ஆள் பற்றாக்குறை, நடவு சமயத்தில் கூலி உயர்வு, நேரத்திற்கு நடவு செய்ய முடியாது போன்ற பிரச்சினைகளை சந்தித்தேன். அப்போதுதான் நேரடி நெல் விதைப்பு என்ற விவசாயத்தை நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இருந்து விரிவாக அறிந்தேன். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இருந்து மகராசி நேரடி நெல் விதைப்பு இயந்திரத்தை கட்டணம் ஏதம் இல்லாமல் எடுத்து சென்று நேரடி நெல் விதைப்பு முறையை விவசாயிகள் முன்னிலையில் அந்த இயந்திரத்தை எப்படி பயன்படுத்துவது என்று செய்து காண்பித்தார்கள். அது மட்டும் இல்லாமல் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் எங்கள் கிராம மக்களை இணைத்துக் கொண்டு பண்ணை அறிவியல் மன்றம் அமைத்து இந்த மன்றத்தினை நபார்டு வங்கியுடன் இணைத்து நடத்தி வருகிறோம். கடந்த இரண்டுஆண்டுகளாக, எனது 3 ஏக்கர் நிலத்தில் நேரடி நெல் விதைப்பு கருவி மூலம் விதைப்பு மேற்கொண்டுள்ளேன். மேலும் இந்த நேரடி நெல் விதைப்பில் குறைந்த செலவினமும் நிறைந்த லாபமும் கிடைப்பதால் எனக்கு விவசாயத்தின் மீது காதல் வந்துவிட்டது. நேரடி நெல் விதைப்பை நான் தொடர்ந்து செய்து வருவதால் திருச்சிராப்பள்ளி வானொலியில் இருந்து என்னை பேச அலைத்தார்கள். அதன் மூலம் இந்தப் பகுதியில் எனக்கு பேரும், புகழும் உயர்ந்தது. மகசூல் ஏக்கருக்கு 2,050 கிலோ வரைப் பெற்றேன். மொத்தத்தில் நேரடி நெல் விதைப்பு செய்வதால் எனக்கு ஏக்கருக்கு நிகர லாபம் 15,000 ரூபாய் பெற்று வருகிறேன். படித்து வேலைப் பார்த்து தொழில் பார்த்த என்னை விவசாயம் சரிவர செய்ய கற்றுக் கொடுத்து என்னை வானொலியில் பேசும் அளவிற்கு உயர்த்தி விவசாய தொழிலில் லாபம் பெற வைத்த நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். இப்போது நானும் எனது குடும்பமும் எனது நிலத்திலேயே இந்த விவசாய தொழிலை சிறப்பாக நேரடி நெல் விதைப்பு மூலம் லாபகரமாக செய்து வருகின்றோம். நான் மட்டுமல்லாது, என் கிராமம் மற்றும் சுற்று வட்டார கிராம விவசாயிகளையும், ஆள் பற்றாக்குறை நிலவி வரும் இக்கால கட்டத்தில் சிறு குறு விவசாயிகளுக்கு வரப்பிரசாதமான ‘நேரடி நெல் விதைப்பு‘கருவியை பயன்படுத்தி ஊக்கப்படுத்தி வருகிறேன். நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உள்ள ‘மூன்று மகராசி நேரடி நெல் விதைப்பு‘ கருவிகளை வாடகைக்கு பெற்று விதைப்பு செய்ய மற்ற விவசாயிகளுக்கு நான் உதவி வருகிறேன். என் இந்த சேவையைப் பாராட்டி நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் எனக்கு ‘வேளாண்மை சாதனையாளர் விருது‘ வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது.

# வாழ்வை வளமாக்கிய துல்லிய பண்ணைய கரும்பு சாகுபடி



என் பெயர் **க.தமிழ்பொழில்.** நான் திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டம் ஆதனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். என் வயது 36. எனது தகப்பனார் பெயர் ஆ.கலியமூர்த்தி, எனது தாயார் பெயர் க.மணவழகி இருவருமே ஆசிரியர்கள். எங்களுக்கு சொந்தமாக 8 ஏக்கர் நிலம் உள்ளது. நான் படித்தது தொழில்துறை (I.T.I).

எனது தகப்பனார் ஆசிரியராக இருந்து கொண்டு அவரே நிலத்தில் சாகுபடி செய்து வந்தார். 2003 ஆம் ஆண்டு எனது தந்தையார் உடல் நலக்குறைவால் காலமானார். பின்பு வயல் பொறுப்பு என்னிடம் வந்தது. முதலில் எந்த வித அனுபவமில்லாமல் நெல் சாகுபடி செய்தேன். வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருந்தது. ஆனால் அடுத்த பருவத்தில் பயிரிடும் போது நஷ்டமடைந்தது. எனவே திரு ஆரூரான் சர்க்கரை ஆலையின் உதவியோடு ஒப்பந்த அடிப்படையில் கரும்பு சாகுபடி செய்ய திட்டமிட்டேன். இந்தியன் வங்கி நிதியுதவியுடனும் திரு ஆரூரான் சர்க்கரை ஆலை உதவியுடன் முதலில் 4 அடி பார் போட்டு கரும்பு நடவு செய்தேன். ஏக்கருக்கு சராசரியாக 42 டன் மகசூல் கிடைத்தது. அடுத்தடுத்த வருடத்தில் கட்டை கரும்பில் மகசூலானது 30 டன்னாக குறைந்தது. அதே சமயத்தில் நெட்பார்ம் கம்பெனியார் உதவியுடன் நிலத்துக்கு அடியில் சொட்டு நீர் பாசனம் அமைத்தேன். ஐந்து ஏக்கர் நிலத்தில் 5 1/2 பார் அமைத்து கரும்பு பயிரிட்டேன். பின்னர் வேளாண்மை அறிவியல் நிலையத்தால் வழங்கப்பட்ட துல்லிய பண்ணைய பயிற்சியில் கலந்து கொண்டு அனைத்து விதமான கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்களை தெரிந்து கொண்டேன். மேலும் தருமபுரிக்கு கண்டுணர்வு அழைத்துச் சென்றதால் கரும்பில் துல்லிய பண்ணையம் எவ்வாறு விவசாயிகள் வெற்றிகரமாக செய்துள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டதால் நல்ல முறையில் சாகுபடி செய்து ஒரு ஏக்கருக்கு 57 டன் என்ற அளவில் அதுவும் 7 1/2 மாதத்தில் வெட்டியது எனக்கு ஆச்சரியமாக இருந்ததுடன் கூடுதலாக இலாபத்தையும் கொடுத்தது. தற்பொழுது மூன்றாவது வருட கட்டைக் கரும்பில் அதிகபட்சமாக 61 டன் என்ற அளவில் மகசூல் பெற்றேன்.

வேளாண்மை அறிவியல் நிலையமும், ஆரூரான் சர்க்கரை ஆலையும் நான் கரும்பில் அதிக மகசூல் பெறுவதற்கு அனைத்து விதமான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள். இப்பொழுது துல்லிய பண்ணையத்தில் கரும்பு சாகுபடி ஒரு வரப் பிரசாதமாகவே இருக்கிறது. சொட்டு நீர்ப் பாசன முறையில் கரும்பு சாகுபடி செய்த பின்னர் எனக்கு அதிக மகசூல் கிடைப்பதுடன் குறைந்த அளவில் நீர் பயன்படுத்தப் படுகிறது. இதனால் எனக்கு ஆட்கூலியும் மிச்சப்படுத்தப்பட்டது. தற்பொழுது வேளாண்மை அறிவியல் நிலையத்தால் நடத்தப்பட்ட 'நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடி' பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றதால் எனது வயலில் 1 ஏக்கர் நிலத்தில் நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடி செய்வது என முடிவெடுத்துள்ளேன். இந்த முறையில் ஏக்கருக்கு 100 டன்கள் வரை மகசூல் பெறமுடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் நான் 100 டன்களுக்கு மேல் மகசூல் எடுக்க வேண்டும் என்று முடிவெடுத்துள்ளேன்.

## தூக்கி நிறுத்திய துல்லிய பண்ணைய கரும்பு சாகுபடி



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் தாலுகா, பெரியக்கோட்டை கிராமத்தில் வசித்து வரும் **ரா. திருநாவுக்கரசு** ஆகிய நான் ஒரு ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்தவன். என் வயது 39. எனது தந்தை ஒரு சிறு தொழில் (மளிகை கடை) செய்து வந்தார். சொந்தமாக ஒரு ஏக்கர் நிலம் மட்டுமே இருந்தது. எனக்கு மூன்று சகோதரர்கள் உள்ளனர். நாங்கள் நால்வருமே அந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்தோம். முதலில் நிலக் கடலை, எள், உளுந்து என்று மாறிமாறி சாகுபடி செய்தோம். பிறகு சிறிய வெங்காயம் சாகுபடி செய்து நல்ல மகசூலை பெற்றோம். பின்னர் வெண்டைக்காய் சாகுபடி செய்தோம். தினமும் மாலை நேரத்தில் அறுவடை செய்து அதிகாலை மார்க்கெட்டுக்கு எடுத்துச் செல்வோம். அதைப் பார்த்த எங்கள் கிராம மக்கள் எங்களை ஏளனப்படுத்தினார்கள். அதை நாங்கள் பொருட்படுத்தாமல் கடினமாக உழைத்ததால் நல்ல லாபம் சம்பாதித்தோம். இவ்வாறு ஒன்று பட்டு சம்பாதித்ததால் 10 ஏக்கர் நிலம் சொந்தமாக வாங்கும் அளவிற்கு உயர்ந்தோம். எங்கள் நால்வருக்கும் திருமணம் ஆன பிறக எனக்கு 2 ஏக்கர் நிலம் பிரித்து கொடுக்கப்பட்டது. அந்த நிலத்தை என் அண்ணனிடமே கொடுத்து விட்டு நான் எனது தந்தையார் செய்த வியாபாரத்தை மட்டுமே நன்றாக செய்து சம்பாதித்து வந்தேன். வியாபாரம் செய்து கிடைத்த வருமானத்தில் தனியாக ஒரு ஏக்கர் நிலம் சொந்தமாக வாங்கினேன். எனக்க விவசாயத்தில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. எனவே வியாபாரத்துடன் விவசாயத்தையும் ஒரு பகுதி நேர தொழிலாக செய்து வந்தேன். எனது மனைவி துணையுடன் விவசாயத்தில் சாதிப்பது என முடிவு செய்து கரும்பு சாகுபடி செய்யலாம் என்று முடிவு செய்தேன். அப்பொழுது தான் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் துல்லிய பண்ணைத் திட்டத்தை அறிமுகம் செய்து பயிற்சி கொடுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு பயன் பெற்றதுடன் எனது நிலத்தில் சொட்டு நீர் பாசனத்தில் கரும்பு நடவு செய்தேன். வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளின் உதவியுடன் 4 அடி பார் அமைத்து சொட்டு நீர்ப் பாசனமுறையில் சாகுபடி செய்தேன். வாரம் ஒரு முறை விஞ்ஞானிகளை சந்தித்து தொழில்நுட்ப ஆலோசனை பெற்று உரிய காலத்தில் அனைத்து வேலைகளையும் செவ்வனே செய்தேன். கரும்பின் வளர்ச்சியைக் கண்டு கரும்பு ஆலை அலுவலர்களும், விஞ்ஞானிகளும் என்னைப் பாராட்டினார்கள். அந்த வருடம் ஏக்கருக்கு 56 டன் மகசூல் கிடைத்தது. கரும்பில் நல்ல வருமானம் கிடைத்ததால் அடுத்ததாக 10 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து துல்லிய பண்ணைய முறையில் கரும்பு சாகுபடி செய்தேன். கரும்பு சாகுபடியில் ஆண்டு க்கு மூன்று லட்சம் முதல் நான்கு லட்சம் வரை நிகர லாபம் கிடைத்தது.

தற்பொழுது வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவியுடன் ஒரு ஏக்கர் நிலத்தில் நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடி செய்வது என்று முடிவு செய்துள்ளேன். துல்லிய பண்ணைய முறையை எனக்கு அறிமுகப்படுத்தி எனது செழுமையான வாழ்விற்கு உறுதுணை புரிந்து கொண்டிருக்கிற வேளாண்மை அறிவியல் நிலையத்தை என் வாழ்வின் பொக்கிஷமாக கருதுகிறேன்.